1972 ஆகஸ்ட் 10]

தேவைப்படும் மூலப் பொருள்களின் தேவை முழுவதையும் மாநில அரசுதான் முடிவெடுக்க வேண்டும். இதில் சங்கடம் இருந்தால் மத்திய அரசோடு சேர்ந்து செயல்படலாம். வினியோகிப்பதையும் மாநில அரசுதான் செய்ய வேண்டும். அப்போதுதான் எங்கேயாவது தவறு நேர்ந்தால்கூட பொறுப்பை நிர்ணயிக்க முடியும். இப்போது முழுவதையும் கொடுக்காமலுள்ள நிலையில் பற்றுக்குறையை வேறு எங்கிருந்து பெறுகின்றார்கள் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். உண்மையிலேயே இதுதான் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. 'அதிக விலைக்குக் கிடைக்கிறது, வாங்குகிறோம்' என்று தொழிலதிபர்கள் சொல்லுகின்றார்கள். இந்த நிலைக்குக் காரணம் யார் என்று குறிப்பிட்டால் அம்மையார் அவர்களுக்குக் கோபம் வரக்கூடும். எனவே இந்த முறைக்குப் பதிலாக மத்திய அரசு தைரியமாக முன்வந்து மாநில அரசுக்குப் பொறுப்பை விட்டுக்கொடுத்தால் இதிலுள்ள குறைபாடுகள் நீங்குவதற்கு வழி பிறக்கும். இதுதான் இந்த அரசின் கொள்கையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீடிக்கப்படுகிறது.

தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

* 45 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னக பெட்ரோ கெமிக்கல் தொழில் கார்ப்பரேஷன் தூத்துக்குடியில் ரசாயன சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவிட அரசுக்கு ஏதேனும் ஆலோசனை வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் நிறுவனம் தூத்துக்குடியில் தொழிற்பயன் எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஏற்புடைமை அறிக்கையை அனுப்பியது. இத்தொழிற்சாலைக்காக உரிமம் வேண்டித் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளது.

மஞ்சளாறு அணைக்கட்டுப் பாசன ஏரிகள்

* 46 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள மஞ்சளாறு அணைக்கட்டில் பாசன உரிமை பெற்ற கண்மாய்கள் எவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறு அணைக்கட்டின்கீழ் பாசன உரிமைப்பெற்ற கண்மாய்கள் பின்வருமாறு :—

(1) பெரியகுளம் தாலுக்கா, கங்குவார்பட்டி கிராமத்தில் :

(1) செங்குளம் கண்மாய்.

(2) மதுவர்குளம் கண்மாய்

(3) குப்பிநாயக்கன் குளம்

(2) நிலக்கோட்டை தாலுக்கா :

(அ) பத்தலக் குண்டு கிராமத்தில் :

(4) வீரன்குளம் கண்மாய்.

(5) பெரியகுளம் கண்மாய்.

(6) வேடன்குளம் கண்மாய்.

(ஆ) கணவாப்பட்டி கிராமத்தில் :

(7) கணவாப்பட்டி கண்மாய்.

(இ) குன்னவரன்கோட்டை கிராமத்தில் :

(8) குன்னவரன்கோட்டை கண்மாய்.

(ஈ) போடியா கவுண்டன்பட்டி கிராமத்தில் :

(9) ஆலங்குளம் கண்மாய்.

(உ) சிவன்னபுரம் கிராமத்தில் :

(10) சிறுகுளம் கண்மாய்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, மஞ்சளாறு அணைக்கட்டி லிருந்து ஆவரம்பட்டி கண்மாய், எத்திலோடு கண்மாய், பிள்ளையார் நத்தம் கண்மாய் ஆகிய கண்மாய்களுக்குக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால் பாசன உரிமை இன்னும் வழங்கப்படவில்லை. நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்தக் கண்மாய்களைப் பார்வையிட்டு ஆவன செய்யப் படும் என்று அங்குள்ள கிராம மக்களுக்கு உறுதியளித்திருக்கின்றார்கள். இப்போதேனும் பாசன உரிமையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றித் தலைமைப் பொறியாளரிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம். அது கிடைத்தபிறகு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 10]

திரு. ஆ. முனியாண்டி : இதே அணைக்கட்டின் கீழ் வரக்கூடிய பொட்டைக் குளம் கால்வாய் இருக்கிறது. அதற்கு மடை திருப்பி பாசன வசதியை ஏற்படுத்தித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேவையானபொழுது ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் அதிக நீர் தேக்கி வைக்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே இந்த மஞ்சளாறு திட்டத்திலிருந்து சிலுவார்ப்பட்டி போன்ற கிராமங்களுக்கும் பாசனத்திற்காகத் தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பற்றிய அறிக்கையைத் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று அதைப் பரிசீலித்தபின்னர் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மஞ்சளாறு அணைக்கட்டிலிருந்து மட்டப்பாறைக் கண்மாய்க்குத் தண்ணீர் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியாக இதுபற்றிய கேள்வியினைக் கொடுத்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

வேப்பிலை கிராமத்திற்குப் புதிய ஏரி

*47 வினா—*திரு. வி. செல்லதுரை :* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், வேப்பிலை கிராமம், கோவிந்தாபுரம் சர்வே எண் 190-ல் புதிதாக ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளது.

அணைக்கட்டுகள்

*48 வினா—*திரு. சி. இராமநாதன் :* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் பாம்பாற்றின் குறுக்கே களபம் அருகில் அணை ஒன்றினைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.